# பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

**மானியக் கோரிக்கை எண்.18**

# அறிவிப்புகள்

**2012 – 2013**

**எம்.சி.சம்பத்,**
ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்



## பட்டு வளர்ச்சித்துறை

### 1) தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல்

பட்டுக்கூடு அறுவடையை வெற்றிகரமாக செய்வதற்கு தனி புழு வளர்ப்பு குடில் கட்ட, சென்ற ஆண்டில் பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு குடிலின் அளவிற்கேற்ப வழங்கப்பட்ட மானியத் தொகையை தற்பொழுது பின்வருமாறு உயர்த்தி வழங்கிட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

| வ. எண் | புழுவளர்ப்பு குடிலின் பரப்பு | சென்ற ஆண்டு | நடப்பு ஆண்டு |
|---|---|---|---|
| 1 | 1500 சதுர அடிக்கு மேல் | ரூ.75,000 | ரூ.1,00,000 |
| 2 | 1000 சதுர அடிக்கு மேல் 1500 சதுர அடிக்குள் | ரூ.50,000 | ரூ.75,000 |
| 3 | 700 சதுர அடிக்கு மேல் 1000 சதுர அடிக்குள் | ரூ.25,000 | ரூ.37,500 |

## 2) பட்டுப்புழு வளர்ப்பு, புழு வளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்து காப்பீடு

பட்டு விவசாயிகளுக்கு பட்டுப் புழுவளர்ப்பு, புழு வளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தவணைக் கட்டணம் ரூ.363/– ஆகும். தற்போது இந்த கட்டணம் மத்திய பட்டு வாரியம் 50 சதவீதம் மாநில அரசு 25 சதவீதம் பயனாளிகள் 25 சதவீதம் என செலுத்தப்படுகிறது. இந்த திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு பயனாளிகள் செலுத்த வேண்டிய தவணைத் தொகை 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைத்து, மாநில அரசின் பங்களிப்பை 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்திட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இதனால் 5000 விவசாயிகள் பயனடைவார்கள்.



## 3) பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் 'பட்டுமலர்' அச்சிட்டு வழங்குதல்

பட்டுத் தொழில் நுட்பங்களை பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்கள் தெரிந்து கொள்ள, துறை மூலம் விற்பனை செய்யப்பட்ட 'பட்டுமலர்' என்ற மாதாந்திர செய்திமடல், 2012–2013ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் 19,000 பிரதிகள் அச்சிடப்பட்டு பட்டு விவசாயிகளுக்கு இரண்டு ரூபாய் மானிய விலையில் வழங்கவும், 1000 பிரதிகள் அரசு அலகுகளுக்கு விலையின்றி வழங்கவும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 4) சிறிய அளவிலான இளம்புழுவளர்ப்பு மையம் அமைத்தல்

மாநிலத்தில் வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் இளம்புழுவளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை விரிவுபடுத்தி **2012–2013**ஆம் ஆண்டு முதல் சிறு குறு விவசாயிகளும் பயன் பெரும் பொருட்டு, முதன் முறையாக சிறிய அளவிலான இளம்புழுவளர்ப்பு மையங்கள் அமைத்து மானிய விலையில் தளவாடங்கள் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இதற்காக மொத்தம் ரூ.**50.00** இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



## 5) மல்பரி மரக்கன்றுகள் நடவு செய்தல்

முதன் முறையாக விவசாய தோட்டங்களில் வரப்பு ஓரங்களில் மூன்று இலட்சம் மல்பரி மரக் கன்றுகள் நடவு செய்ய **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**26.25** இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

## 6) மல்பரி தோட்டங்களுக்கு நுண்ணூட்ட சத்துக்கள் அளித்தல்

பட்டு செடியின் இலை உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளுக்கு வருவாய் கூட்ட, மல்பரி தோட்டங்களுக்கு மண்பரிசோதனையின் அடிப்படையில், விலையில்லா நுண்ணூட்ட சத்துக்கள், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2012–2013 ஆம் ஆண்டில், ரூ.40.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.



# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் *“பூம்புகார்”*

## 1. கைவினைஞர்களுக்கு கண்காட்சிகள் மூலம் நேரடி சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்

2011–2012 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 180 கண்காட்சிகளை நடத்தி அதன் மூலம் கைவினைஞர்களுக்கு நேரடி சந்தை வாய்ப்பினை உருவாக்கியது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** நடப்பு ஆண்டில் சுமார் 220 கண்காட்சிகளை ரூ.165.00 இலட்சம் செலவில் நடத்தி அதன் மூலம் கைவினைஞர்கள் பயன்பெற வழிவகை செய்யப்படும்.

## 2. வெளிமாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்கு பெறும் கைவினைஞர்களுக்கான உதவித் தொகை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** வெளிமாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் தமிழ்நாட்டிலிருந்து பங்கு பெற விரும்பும் கைவினைஞர்களுக்கு இந்த ஆண்டு முதல் ரூ.5.00 இலட்சம் அளவில் போக்குவரத்து, உணவு மற்றும் இதர செலவினங்களை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.



## 3. மின் வணிகம் துவக்கப்படுதல்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது விற்பனையை அதிகரிக்க 2012–2013ஆம் ஆண்டில் மின் வணிகம் துவக்கி, கைவினைப் பொருட்களை கணினி மூலமாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.சி.சம்பத்
ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்